பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 227

சனிக்கிழமை
12 ஜூலை 2025

ஆனி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## நயினாதீவு மருத்துவமனை இன்று திறப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 12
நயினாதீவு பிரதேச மருத்துவமனை, இன்று காலை 10 மணியளவில் சுகாதார அமைச் 11

# பாலியாற்றுத் திட்டம் நடக்குமா? நடக்காதா?

## முடிவெடுக்க அமைச்சர்கள் வருகை

### நேரில் சென்று களஆய்வில் ஈடுபடுவர்

**யாழ்ப்பாணம், ஜூலை 12**

**பாலியாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வனப்பகுதியை வழங்குவதற்கு வனவளத் திணைக்களம் மறுப்புத் தெரிவித்துள்ள நிலையில், இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக துறைசார் அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, தம்மிக்க பட்டபெண்டி, அநுர கருணாதிலக ஆகியோர் நாளை வடமாகாணத்துக்கு வருகைதரவுள்ளனர்.** 11

## செம்மணிப் புதைகுழியில் இனவழிப்பு ஆதாரங்கள்!

ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு சுமந்திரன், சி.வி.கே. கடிதம்

விரிவு பக்கம்:- 11

சட்டவிரோத மணல் கடத்தல்;

## ஆணிப்பலகை வைத்து டிப்பர் மடக்கிப் பிடிப்பு

### ஒருவர் கைது; இருவர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 12
மணற் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் ரக வாகனம், பருத்தித்துறைப் பொலிஸாரால் ஆணிகள் அடிக்கப்பட்ட பலகைகள் வீசப்பட்டு மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது. அந்த டிப்பரில் இருந்த இருவர் தப்பியோடிய நிலையில், டிப்பரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். 11



மோட்டார்சைக்கிள் சக்கரத்துக்குள் தடியைச் செலுத்தி

## பொலிஸார் செய்த அடாவடியால் அப்பாவிப் பொதுமகன் உயிரிழப்பு

பிந்திய செய்தி

### பொலிஸ் அதிகாரி சிறைப்பிடிப்பு
### கூமாங்குளத்தில் நேற்றுப் பரபரப்பு

வவுனியா, ஜூலை 12
வீதியில் பயணித்த அப்பாவிப் பொதுமகனின் மோட்டார்சைக்கிள் சக்கரத்துக்குள், பொலிஸார் தடியைச் செலுத்தி செயற்கை 10

மன்னார் மாவட்டம்

## வெள்ள இடர் தொடர்பில் நாளை கலந்துரையாடல்!

### அமைச்சர்கள் குழு பங்கேற்பு

மன்னார், ஜூலை 12
மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக ஏற்படும் வெள்ளப் பேரிடர் தொடர்பில், நாளை அமைச்சர்கள் குழு சிறப்புக் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளது.
மன்னார் மாவட்டச் செயலகத்தில், மாவட்டச் செயலர் கனகேஸ்வரன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. பாலியாற்றுத் திட்டம் தொடர் 11

## பிரிக்ஸில் இலங்கை இணைய எந்தவொரு தடையும் இல்லை!

ரஷ்யா வெளிப்படை



மொஸ்கோ, ஜூலை 12
பிரிக்ஸ் கூட்டணியில் இலங்கை இணைவதற்கு எந்தத் தடையும் இல்லை. தெற்காசியாவில் ரஷ்யாவின் 11



## சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள்: வேம்படி மகளிர் வடக்கில் முதலிடம்!

### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 12
சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளில், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை வடமாகாணத்தில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு வெளியாகின. இதன்படி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை வடக்கில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
இந்தப் பாடசாலையிலிருந்து இம்முறை சாதாரணதரப் பரீட்சைக்குத் 12

'பொல்லுக்குத்து அடிவேண்டுறதெண்டது உதைத்தான் பாருங்கோ'

## வீதியில் ஓரமாகநின்ற இளைஞர் ஓட்டோ மோதியதில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12
வீதியின் ஓரமாக நின்ற இளைஞர் ஒருவரை, வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோவொன்று மோதித் தள்ளியதில், அவர் படுகாயமடைந்து உயிரிழந்தார்.
நுணாவில் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. நுணாவில் மத்தி, 11

## ஆணொருவரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 12
யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த ஆணொருவர் அவரது வீட்டிலிருந்து நேற்றுக் காலை சடலமாக 11

## நவம்பர் 10ஆம் திகதி உயர்தரப் பரீட்சை!

கொழும்பு, ஜூலை 12
2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை நவம்பர் 10ஆம் திகதி முதல் டிசெம் 11

## 13,392 மாணவர்களுக்கு இம்முறை '9ஏ' சித்தி!

கொழும்பு, ஜூலை 12
க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் நாடளாவிய ரீதியில் 13 ஆயிரத்து 392 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் 11

சாதாரணதரப்பெறுபேறு

## கடைசி நிலையில் வடக்கு மாகாணம்

கொழும்பு, ஜூலை 12
கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பெறுபேறுகளில், தேசிய ரீதியில் வடக்கு மாகாணம் கடைசி நிலையில் உள்ளதாகத் தெரிவிக் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 11.07.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 4129
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 18 34 54 63
விசேட எழுத்து: S

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி: 11.07.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1196
வெற்றி இலக்கினம்: மகரம்
வெற்றி இலக்கங்கள்: 20 35 49 54

**NLB ஜய**
திகதி: 11.07.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0155
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 1 2 9 0

**மெகா பவர்**
திகதி: 11.07.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2235
ஆங்கில எழுத்து: T
சுப்பர் இலக்கம்: 03
வெற்றி இலக்கங்கள்: 04 18 19 59

**மஹஜன சம்பத**
திகதி: 11.07.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 5887
ஆங்கில எழுத்து: Y
வெற்றி இலக்கங்கள்: 6 3 7 5 7 3

**தன நிதானய**
திகதி: 11.07.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1917
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 28 33 39 72
விசேட எழுத்து: G

**அத சம்பத**
திகதி: 11.07.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0462
ஆங்கில எழுத்து: Y
வெற்றி இலக்கங்கள்: 7 5 7 3

**சுப தவசக்**
திகதி: 11.07.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0003
வெற்றி இலக்கினம்: ரிஷபம்
வெற்றி இலக்கங்கள்: 07 09 23 29

# சர்வதேசப் பொறிமுறைகோரி 26 அன்று பெரும் போராட்டம்

## ஆதரவு கோருகின்றது வடக்கு, கிழக்கு சமூக இயக்கம்

**கொழும்பு, ஜூலை 12**
**சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் எதிர்வரும் 26ஆம் திகதி பெரும் மக்கள் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள அனைவரும் ஒன்றிணையவேண்டும் என்று வடக்கு, கிழக்கு சமூக இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.**

அவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளர் க. லவகுசராசா இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது
இலங்கையில் மனிதகுலத்துக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் எடுக்கப்படும் இலங்கை தொடர்பான தீர்மானம் வலுவானதாக அமைவதற்கு மக்கள் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் தமிழ் மக்களாகிய நாம் இருக்கின்றோம்.
இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறை ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு அமையப் போவதில்லை. மாறாக சர்வதேச பொறிமுறைகள் ஊடாகவே தமிழ் மக்களுக்கான தீர்வுகள் எட்டப்படவேண்டும் என்பதை வலியுறுத்திப் பல தடவைகள் இலங்கைக்கு உள்ளேயும், சர்வதேசத்திலும் கோரிவருகின்றோம்.
இந்தநிலையில், ஐ.நா. இலங்கை தொடர்பான பிரச்சினைகளுக்கு உள்ளகப் பொறிமுறைகள் ஊடாகவே தீர்வை மேற்கொள்ள வேண்டும் எனும் கருத்தைத் தங்களது அறிக்கைகளிலும், ஊடக நேர்காணல்களிலும் குறிப்பிடுவதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.
சர்வதேச நீதிப் பொறிமுறையின் ஊடாகக் கிடைக்கவேண்டும் என்பதை மீள வலியுறுத்தி எதிர்வரும் 26ஆம் திகதி வடக்கு - கிழக்கு தழுவியரீதியில் பெரும் மக்கள் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்ய எண்ணியுள்ளோம். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்- என்றார். (எ-இ)

**சுபிரி தன சம்பத**
| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 11.07.2025 | வெள்ளிக்கிழமை | A | 6 8 9 6 5 6 | 0595 |

**Super Ball**
| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 11.07.2025 | வெள்ளிக்கிழமை | 2861 | G | 57 64 69 74 |

**சனிதா**
| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 11.07.2025 | வெள்ளிக்கிழமை | T | 22 28 44 65 | 5022 |

**SASIRI**
| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 11.07.2025 | வெள்ளிக்கிழமை | 0723 | 13 21 26 |

**லக்ன ராசி**
| திகதி | தினம் | சிம்மம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 11.07.2025 | வெள்ளிக்கிழமை | | 13 31 36 49 | 4573 |

**KAPRUKA**
| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 11.07.2025 | வெள்ளிக்கிழமை | C | 06 | 23 58 63 74 | 2037 |

**அத கோடிபதி**
| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 11.07.2025 | வெள்ளிக்கிழமை | C | 41 45 55 63 | 2687 |

# அமெரிக்க வரிவிதிப்பால் பெரும் தாக்கம் ஏற்படாது

## தம்மிக்க பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 12
அமெரிக்கா அறிவித்துள்ள புதிய வரி நிலைமை தொழில் பாதுகாப்புப் பிரச்சினையைப் பெரியளவில் ஏற்படுத்தாது. ஆனால் புதிய முதலீட்டாளர்களை அதிகளவில் கவரவேண்டிய தேவை காணப்படுகிறது. அரசாங்கம் அதற்குரிய துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என சுதந்திர வர்த்தக வலய முதலீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் தம்மிக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்ட 44 சதவீத வரி நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டிருக்கும். ஆயினும் தற்போது அது 30 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதால் இலங்கைக்குள்ள போட்டி நிலைமை உயர்வடைந்துள்ளது. சிறியளவிலேயே ஏற்றுமதி வருமானத்தில் சரிவு ஏற்படக்கூடும்.
ஏற்றுமதித் தொழிற்றுறைகளில் தொழிநுட்பத்தை மேம்படுத்துவது தொடர்பாக உரிய தரப்பினர் அவதானம் செலுத்தவேண்டும். அவ்வாறில்லை எனில் உலக நாடுகளின் துரித அபிவிருத்தி எமக்கு சவாலானதாக அமையும். ஆடைத் தொழிற்றுறையில் மூலப்பொருள் உற்பத்தியாளர்கள் நாட்டில் உள்ளனர். அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் பட்சத்தில் அதன் ஊடாகவும் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளமுடியும்.
ஆடைத் தொழிற்றுறை மாத்திரமின்றி ஏனைய துறைகளிலும் மூலப்பொருள் உற்பத்தி முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்படவேண்டும். அரசாங்கம் ஏற்றுமதித் தொழிற்றுறையினருடன் பேச்சுகளை முன்னெடுத்து துரித நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் - என்றார். (எ-இ)

# வரிச்சலுகைகளுக்கு பேச்சுகள் தொடரும்

## பிரதியமைச்சர் அனில் ஜயந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 12
அமெரிக்காவிடமிருந்து மேலதிக வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்வதற்குரிய இருதரப்புப் பேச்சுகள் தொடரும் என்று தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
வரிவிதிப்புத் தொடர்பில் அமெரிக்கா கடிதம் அனுப்பிவைத்துள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதிக்குள் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்துக்கு வராவிட்டால் 30 சதவீத வரி விதிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. எனவே அமெரிக்காவுடனான இருதரப்புப் பேச்சு தொடரும்- என்றார். (ச-44)

# இந்தாண்டில் இதுவரை துப்பாக்கிச்சூடுகள் 66

கொழும்பு, ஜூலை 12
2025ஆம் ஆண்டு ஜனவரி முதல் நேற்று வெள்ளிக்கிழமை வரை நாடுமுழுவதும் 66 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
அவற்றில் 48 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுக்கு இடையேயான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் ஆகும். இவற்றில் 37 பேர் இறந்துள்ளனர், 37 பேர் காயமடைந்துள்ளனர்.
பாணந்துறைப் பொலிஸ் பிரிவில் மட்டும், கடந்த இரண்டரை மாதங்களில் ஐந்து துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன. இதில், ஒருவர் உயிரிழந்துள்ளார் மற்றும் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர். (எ-இ)

# தகவலறியும் ஆணைக்குழுவின் தலைவர் நியமனத்தில் தாமதம்

கொழும்பு, ஜூலை 12
தகவலறியும் உரிமை ஆணைக்குழுவுக்குத் தலைவர் நியமிக்கப்படாதுள்ளமை தொடர்பாக ட்ரான்பரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.
தகவலறியும் உரிமைச் சட்டத்தின்படி, தகவல் அறியும் ஆணைக்குழு ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருப்பதுடன், ஒரு தலைவர் அவசியமானவர். ஆயினும் தற்போது ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதியரசர் டி.என். சமரகோன் (2025 மே மாதத்தில் நியமிக்கப்பட்டவர்), சட்டத்தரணி கிஷாலி பிண்டோஜயவர்த்தன, சட்டத்தரணி ஜகத் லியனாரச்சி மற்றும் ஏ.எம். நஹியா ஆகிய நால்வர் மட்டுமே செயற்பாட்டில் உள்ளனர். ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி உபாலி அபயரத்ன பதவி விலகியதிலிருந்து, தலைமைப் பொறுப்பு வெற்றிடமாகவே உள்ளது.
இந்தச் செயற்பாடுகளில் தலைவரின் பங்கு முக்கியமானதாகும். நியமனத்தை மேலும் தாமதிப்பது, ஆணைக்குழுவின் செயற்றிறனைப் பாழாக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது என்று ட்ரான்பரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஆண்டுதோறும் 40,000 புதிய புற்றுநோயாளர்கள்

கொழும்பு, ஜுலை 12

இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் 35 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரையான புற்றுநோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்படுகின்றனர். அதனடிப்படையில் ஒவ்வொருநாளும் சுமார் 103 புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் என்று தேசிய புற்றுநோய் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் குடும்பநல விசேட மருத்துவ நிபுணர் தூராஜ் பெரேரா தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- ஆண்கள் பெரும்பாலும்வாய்ப்புற்றினால்பாதிப்படைகிறார்கள். சுவாசப் புற்று, மலக்குடல் புற்று போன்ற புற்றுநோய்களால் ஆண்கள் அதிகம் பாதிப்படைகின்றனர். பெண்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அதிகம் மார்பகப் புற்றால் பாதிப்படைகிறார்கள். இரண்டாவதாகத்தைரொய்ட்புற்றுநோய், மூன்றாவதாக பெருங்குடல் மற்றும் மலக்குடல் புற்று என்பன அதிகம் பரவலடைகின்றன. கர்ப்பப்பைப் புற்றும் பெண்கள் மத்தியில் அதிகம் பரவலடைந்து வருகிறது - என்றார். (எ-இ)

## பாணந்துறையில் துப்பாக்கிச்சூடு



கொழும்பு, ஜுலை 12

பாணந்துறை, ஹிரணப் பொலிஸ் பிரிவின் மாலமுல்லப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று வெள்ளிக்கிழமை தூங்கிக் கொண்டிருந்த ஒருவர்மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இனந்தெரியாத நபர் ஒருவர் வீட்டின் ஜன்னலை உடைத்து துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த 32 வயதுடையவர் சிகிச்சைக்காக பாணந்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களைக் கைதுசெய்ய 3 பொலிஸ் குழுக்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## தமிழக மீனவர்களுக்கு 17 வரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜுலை 12

தலைமன்னார் கடற்பரப்பில் கைதான இராமேஸ்வரம் மீனவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதிவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த முதலாம் திகதி குறித்த 7 மீனவர்களும் எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 23 படகுகளுடன் 174 தமிழக மீனவர்கள் கைதாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-35)



## போதைப்பொருள் வியாபாரம்; பெண் கைது

மட்டக்களப்பு, ஜுலை 12

மட்டக்களப்பு பூனொச்சிமுனைப் பகுதியில் நீண்டகாலமாக ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் காத்தான்குடிப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரகசியத் தகவலின் அடிப்படையில், புலனாய்வாளர்கள் வாடிக்கையாளர்களாக வேடமிட்டு மேற்கொண்ட நடவடிக்கையின்போது குறித்த பெண் கைதுசெய்யப்பட்டார். (ச-இ)

## ராஜிதவைக் கைதுசெய்ய நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஜுலை 12

கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தில் மணல் அகழ்வுத் திட்டத்தை கொரிய நிறுவனத்துக்கு ஒப்படைத்து அரசாங்கத்துக்கு நஷ்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரத்னவை கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனுவெல நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு சமர்ப்பித்த கோரிக்கையை கருத்திற்கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கெஹலிய வழக்கு செப்.16 இல்

கொழும்பு, ஜுலை 12

தரமற்ற மனித இம்யூனோகுளோபுளின் மருந்துகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 11 பேர் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் செப்ரெம்பர் 16ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கிற்கான குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், அதனுடன் இணைக்கப்பட்ட துணை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

அதன்படி துணை ஆவணங்களை வழங்குவதற்கு வழக்கு விசாரணையை செப்ரெம்பர் 16 ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது. (ச-இ)






## இஞ்சி தின்ட இஞ்சினியர்கள்

பழம் இருக்க சுளைவிழுங்கிறவைக்கு குளம் இருக்க களவெடுக்கிறது கஷ்டமில்லைத்தானே. அண்டைக்கு மன்னாரில 42 குளங்களைத் திருத்தினது எண்டு பொய் ரிப்போர்ட் குடுத்து காசடிச்சவை பற்றி பட்சி சொன்னதெல்லோ. தங்கட குட்டு எல்லாம் பட்சி போட்டுடைச்சிட்டுதே எண்டு அந்த இஞ்சினியர்மார் எல்லாரும் இஞ்சி தின்ட குரங்குமாதிரி முகச் சுழிப்போட உதை மறைக்கிறதுக்கு என்னவழி எண்டு யோசிக்கினமாம். ஆனால் அவை என்னதான் யோசிச்சாலும் எல்லாம் கைமீறிப்போட்டுது. அந்தத் தகவல் போகவேண்டிய இடங்களுக்குப் போய், விசாரணையளும் அமளியா நடக்குதாம். இப்பிடி விசாரணையளில என்னமாதிரி இவை திருத்தாத குளத்தைத் திருத்தினது எண்டு ஏமாத்திக் காசடிச்சவை எண்ட தகவல்களும் ஆதாரங்களோட கிடைச்சிருக்காம்.

இந்த இஞ்சினியர்மார் முதலில எந்தெந்தக் குளத்தில தாங்கள் கையைவைச்சால் சோலி வராது எண்டு சின்னதா ஒரு வேவு பாப்பினமாம். பெரும்பாலும் அந்தக்குளங்களைப் பாவிக்கிற கமக்கார அமைப்புகள்தான் "எங்கட குளம் திருத்துப்படேலை" எண்டு போர்க்கொடி தூக்கிறவை. அதால தங்களுக்குச் சாதகமான ஆக்கள் நிர்வாகத்தில இருக்கிற கமக்கார அமைப்புகளுக்கு கீழ என்னென்ன குளங்கள் இருக்கோ, அதுகளைத்தான் உவையள் செலக்ட் பண்ணி, ஏன் அந்தக் குளத்தைத் திருத்தோனும்? திருத்தினால் என்னென்ன லாபம் ? எண்ட சாத்தியக்கூற்று அறிக்கையளோட எவ்வளவு காசு முடியும் எண்ட பட்ஜெட்டையும் சேர்த்து ஒரு புரஜெக்ட் ரிப்போர்ட்டை மேலிடத்துக்கு அனுப்புவினம். அந்த ரிப்போர்ட்டைப் பார்த்திட்டு "கட்டாயம் இந்தக் குளத்தை திருத்தத்தான் வேணும்" எண்டு அரசாங்கமும் உடனேயே ஓமெண்டு தலையாட்டும்.

பிறகு இவை என்ன செய்வினம் எண்டால், அந்தக் குளங்களைத் திருத்திற வேலையின்ர ஒப்பந்தத்தை தங்கட சொல்லுக் கேக்கிற ஆக்கள் இருக்கிற கமக்கார அமைப்புகளுக்குக் குடுப்பினமாம். அவையும் அந்த வேலை செய்துமுடிச்சமாதிரி கணக்கெல்லாம் காட்டுவினம். அதைத் தாங்கள் மேற்பார்வை செய்து எல்லாம் கிளீனா செய்துமுடிச்சிட்டினம் எண்டு இஞ்சினியர்மார் மேலிடத்துக்கு ரிப்போர்ட் அனுப்புவினம். இஞ்சினியர்மார் சொன்னால் அதுக்குமிஞ்சி ஆருக்கும் டவுட் வருமோ? அதால உடனேயே குளத்தின்ர திருத்தவேலைக்குரிய 'செக்', அந்த வேலையைப் பாரமெடுத்த கமக்கார அமைப்புக்குப் போகும். அங்க நிர்வாகத்தில இருக்கிறவை தங்களுக்கும் கொஞ்சம் எடுத்துக்கொண்டு , மிச்சத்தையெல்லாம் இஞ்சினியருக்குக் குடுத்திடுவினம். அப்பிடிச் சில கமக்கார அமைப்புகள் இஞ்சினியர்மாருக்கு குடுத்த 'செக்' கின்ர அடிக்கட்டையள் இப்ப மாட்டுப்பட்டிருக்காம். அதையெல்லாம் வைச்சுத்தான் விசாரணைக்குழு கிடுக்கிப்பிடி போட்டிருக்கு. பாப்பம் இதில இஞ்சினியர்மார்மட்டுமில்லாமல் இன்னும் பெரிய முதலையளும் மாட்டுப்படப்போயினம் எண்டு சொல்லுப்படுது. பிடிபடேக்க எல்லாரும் பாக்கத்தானே போறியள்.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சி தரும் நாளாக இருக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. தந்தைவழியில் சில செலவுகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு வெளியூரில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். குடும்பத்துடன் குலதெய்வக் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

**கடகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. தாய்மாமன்மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும்.

**கன்னி:** சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்குக் கோயில்களுக்குச் சென்று வழிபாடுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து மகிழ்ச்சியடைவீர்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடைகள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். மகான்களைத் தரிசிக்கவும் அவர்களின் ஆசிகளைப் பெறவும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகை சில சங்கடங்களைத் தரும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மகரம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். சகோதரவகையில் ஆதாயம் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கும், எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சிதரும். சிலருக்குக் குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். குடும்பப் பொறுப்புகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலைய வேண்டியிருக்கும். சிலருக்குப் பயணங்களால் அனுகூலம் உண்டாகும். உடல் நலனில் கவனம் தேவை. தெய்வப் பிரார்த்தனைகளை இன்று நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.



## 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டம்; வல்வையில் விழிப்புணர்வு

கிளீன் ஸ்ரீலங்காத் திட்டத்தின்கீழ் வல்வெட்டித்துறை நகரசபை ஆளுகைக்குட்பட்ட சிதம்பராக் கல்லூரி உள்ளிட்ட பாடசாலைகளில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை விழிப்புணர்வுச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. செயற்றிட்டத்தில் வல்வெட்டித்துறை நகரசபை பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் டெங்கு, சிக்கன்குனியா மற்றும் அதனுடன் தொடர்புடைய கழிவு முகாமைத்துவம் பற்றி மாணவர்களுக்குத் தெளிவூட்டப்பட்டது. (ச-25, 100)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜுலை 12

குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் காலை 8.10 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது. இதேவேளை, இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் நடைபெறுமென மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-25,66)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜுலை 12

ஊரெழு கலைவாணி முன்பள்ளியின் "விளையாடி மகிழ்வோம்" நிகழ்வு சி. இளங்கோ தலைமையில் பள்ளி மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை தவிசாளர் தி.நிரோஷ், சிறப்பு விருந்தினர்களாக ஊரெழு கணேச வித்தியாலய அதிபர் இரா. ஜெயக்குமார், பிரசாத் நகையக உரிமையாளர் ச.உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25)



## ஆசிரியர் கலாசாலை வாராந்த ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜுலை 12

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆங்கில நெறி, வணிக நெறி ஆசிரிய மாணவர்கள் இணைந்து முன்னெடுத்த வாராந்த ஒன்றுகூடல் நிகழ்வு கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன் தலைமையில் கலாசாலையின் மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் மாங்குளம் அ.ம.தி கரங்கள் அமைப்பின் இயக்குநர் அருட்பணி செபமாலை அன்புராசா அடிகளார் அதிதிப் பேச்சாளராகக் கலந்துகொண்டு 'எழுத்தாளனின் உலகம்' எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். கலாசாலையின் ஆசிரிய மாணவி சுப்பிரமணியம் செல்வகுமாரி "கலாசாலை தந்த எழுத்தாளர்" எனும் பொருளில் உரை நிகழ்த்தினார். (ச-25,66)

### தேசிய மாஸ்ரேஸ் போட்டி

## யாழ்ப்பாண வீரருக்கு இரு தங்கப்பதக்கங்கள்



யாழ்ப்பாணம், ஜுலை 12

38ஆவது தேசிய மாஸ்ரேஸ் மெய்வல்லுநர் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த செல்வராஜா ரமணன் இரண்டு தங்கப்பதக்கங்களைத் தனதாக்கியுள்ளார்.

இந்தப் போட்டி டியகம மகிந்த ராஜபக்ஸ விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

செல்வராஜா ரமணன் 45 -49 வயதுப் பிரிவு கோலூன்றிப்பாய்தல் போட்டியில் பங்குபற்றி 2.81 மீற்றர் தூரம் கடந்து தங்கப்பதக்கம் வென்றார்.

இதேவேளை உயரம் பாய்தல் போட்டியில் 1.55 மீற்றர் உயரத்தைக் கடந்து தங்கபதக்கத்தைத் தனதாக்கினார்.

இவர் நவம்பர் மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள 22 ஆவது ஆசிய மாஸ்ரேஸ் மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்றுவதற்கும் தகுதிபெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25)

## சித்தி விநாயகர் தேர்



யாழ்.புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய விசுவாவசு வருட மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த புதன்கிழமை பல நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் பக்திபூர்வமாக இடம் பெற்றது. (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



**நாளொரு நல்வார்த்தை**

நம்பிக்கையால் பார்க்கவேண்டுமானால்
பகுத்தறிவுக் கண்ணை மூடிக்கொள்ளவேண்டும்.

– பிராங்க்ளின்


**உண்மை - நேர்மை - அஞ்சாமை**

# தன்னிறைவின் தேவை!

இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு 30 வீதம் வரி விதிக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிமுதல் இந்த வரி விதிப்புகள் நடைமுறைக்கு வரவுள்ள நிலையில், இலங்கை அரசாங்கத்தில் ஒருவிதப் பதற்றமும் பரபரப்பும் தொற்றிக்கொள்கின்றமை அவதானிப்பு. ஆனால், எதற்காக இத்தனை பதற்றம்? பரபரப்பு? அமெரிக்காவின் ஒற்றை அறிவிப்பு, இலங்கையை மட்டுமல்ல ஒட்டுமொத்த நாடுகளையும் கிலிகொள்ள வைக்கின்றதென்றால், அதற்குக் காரணம் என்ன? இதுதான் தன்னிறைவுப் பொருளாதாரத்துக்கும், சார்புப் பொருளாதாரத்துக்கும் இடையிலான வேறுபாடு.

இன்று ஒட்டுமொத்த உலக வர்த்தகத்தையும் தீர்மானிக்கும் சக்தியாக அமெரிக்கா காணப்படுகின்றமைக்குப் பிரதானமான காரணம், தன்னிறைவுப் பொருளாதாரத்தில் அந்த நாடு அசைக்கமுடியாத பலத்துடன் இருப்பதுதான். மூலப்பொருள் முடிவுப்பொருள் என அனைத்தையும் தீர்மானிக்கும் சக்தியாக அமெரிக்கா காணப்படுகின்றது. ஆதலால் தான், அதனால் அதிகூடிய சனத்தொகையைக் கொண்டுள்ள இந்தியாவையும் கட்டுப்படுத்தமுடிகின்றது, சீனாவையும் கட்டுப்படுத்தமுடிகின்றது. இலங்கையின் பொருளாதாரம் இறக்குமதிப் பொருள்களை மையப்படுத்தியதாகவே நகர்ந்து சுழன்றுகொண்டிருக்கின்றது. தற்சார்பு நிலையை அடையக்கூடிய விடயங்களில்கூட இறக்குமதியை நம்பித்தான் இலங்கையர்களின் காலங்கள் கடந்து செல்கின்றன. பால், இறைச்சி, மீன், கால்நடைத் தீவனங்கள் என மிக இலகுவாக தன்னிறைவு காணப்பட வேண்டிய துறைகளில் தன்னிறைவு கண்டிருந்தால் கூட ஓரளவு பேரம்பேசும் சக்தியாக இலங்கை நிலைபெற்றிருக்கும். ஆனால், இறக்குமதியைத் தவிர வேறெதையும் அறியாத, கையாலாகாத கடந்த அரசாங்கங்களும், அவற்றைத் தொடர்ந்துவந்த தற்போதைய அரசாங்கமும் மக்களை வரிகளாலும் விலையேற்றங்களாலும் வதைப்பதைத்தவிர வேறு எதையும் செய்யவில்லை.

தற்சார்புப் பொருளாதாரம் பலப்பட்டால் இறக்குமதிச் செலவுகள் குறையும். டொலரின் வெளிச்செல்கை இல்லாமலாகும். ஒரு பொருளை உள்ளூரில் உற்பத்தி செய்வதிலும் பார்க்க பலமடங்கு பணத்தை, பிறிதொரு நாட்டில் உற்பத்தி செய்த அதேபொருளுக்காக வாரிவழங்கிக்கொண்டிருப்பது சிந்தனைப் பிறழ்வான நடத்தை. அத்தகைய பிறழ்வான நடத்தை இல்லாதமையால்தான் இன்று அமெரிக்கா தீர்மானிக்கும் சக்தியாக மாறியிருக்கின்றது. அத்தகைய நிலையை இலங்கை அடைவதற்கு இன்னும் சில தசாப்தங்களாவது தேவை. ஆனால், குறைந்தபட்சம் அத்தகைய தொலைதூரச் சிந்தனையின் பாற்பட்டு, சில முன்முயற்சிகளையாவது மேற்கொள்ளமுடியும். துன்பத்திலும் சிறு இன்பம் என்பதைப்போல், இலங்கைக்கு 'தற்காலிகமான' ஓர் ஆறுதலாக பங்களாதேஷுக்கு எதிரான அமெரிக்காவின் வரிவிதிப்பு அமைந்துள்ளது. அதாவது பங்களாதேஷுக்கு 35 வீதமான வரி விதிப்பை அறிவித்துள்ளது அமெரிக்கா. அமெரிக்க ஆடைச்சந்தைகளை மையப்படுத்திய இலங்கையின் பிரதான போட்டியாளர் பங்களாதேஷ்தான். எனவே, பங்களாதேஷுக்கு விழுந்துள்ள வரிவிதிப்பு, அமெரிக்கச் சந்தையில் இலங்கையின் இடத்தை உறுதிப்படுத்தவேசெய்யும். ஆயினும் தன்னிறைவுப் பொருளாதாரத்தைத் தொலைதூரத் தீர்வாகவும், பரந்துபட்ட பேச்சுவார்த்தைகளை உடனடித் தீர்வாகவும் கொண்ட நடவடிக்கைகளே தற்போது காலத்தேவை.





# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

**கொழும்பு, ஜூலை 12**

**பயங்கரவாதச் தடைச்சட்டம் விரைவில் நீக்கப்படும் என்றும் அதற்கான அடிப்படை நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டுவருகின்றன என்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அண்மையில் இலங்கைக்கு வந்துசென்றார். அது எமக்கு சாதகமான நிலைமையை சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலின் பின் நாட்டில் மனித உரிமை நிலைமைகள் நல்ல முன்னேற்றத்தை அடைந்துள்ளன. அந்தத் தேர்தலின் பின் இடம்பெற்ற நாடாளுமன்ற மற்றும் உள்ளூராட்சிசபை தேர்தல்கள் இரண்டும் நாட்டில் என்றும் இல்லாதவாறு மிகவும் சுதந்திரமாக இடம்பெற்றன. 34 வருடங்களாக மூடப்பட்டுக் கிடந்த பலாலி வீதியைத்திறந்தோம். எல்லாவற்றையும் விட முக்கியமான விடயம்தான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல். இதை நீக்க வேண்டும் என்பது எமது மாறாத நிலைப்பாடாகும். அதற்கான அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன-என்றார். (எ-75)

## மருந்துகள் நன்கொடை; அமெரிக்கா ஒப்புதல்

கொழும்பு, ஜூலை 12

இலங்கைக்குத்தேவையான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் அறுவைச் சிகிச்சை உபகரணங்கள் நன்கொடையாக வழங்கப்படும் என்று அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கிடையில் சுகாதார அமைச்சில் கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளது. அதில் மருந்துகள் மற்றும் சுகாதார சேவைகள் வழங்குவது தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. கலந்துரையாடலில் அமெரிக்கத் தூதுவர் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் அறுவைச் சிகிச்சை உபகரணங்களை வழங்க ஒப்புக்கொண்டுள்ளார். (எ-இ)




## சா/தரப் பெறுபேறு மீள்பரிசீலனைக்கு விண்ணப்பத் திகதி

கொழும்பு, ஜூலை 12

சாதாரணதரப்பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்வதற்குரிய விண்ணப்பத் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இம்மாதம் 14 ஆம் திகதி முதல் 28ஆம் திகதிவரை ஒன்லைன்மூலம் விண்ணப்பிக்கமுடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். (ச-44)

## ஹரக்கட்டா மனைவி கைது

கொழும்பு, ஜூலை 12

'ஹரக் கட்டா'என அழைக்கப்படும் நதுன் சிந்தகவின் மனைவி, அவரது குழந்தையுடன் மலேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர்கள் மலேசியாவிலிருந்து தாய்லாந்துக்குப் படகு மூலம் தப்பிச்செல்ல முயன்ற போதே கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## போதைப்பொருள் தகராறில் ஒருவர் பலி

கொழும்பு, ஜூலை 12

காலி கிங்தொட்டப் பிரதேசத்தில் கத்திக்குத்துக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என காலிப் பொலிஸார் தெரிவித்தனர். போதைப்பொருள் பொதி ஒன்றுக்காக ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



நாளை
ஞாயிற்றுக்கிழமை - ஆனி 29
13.07.2025
சுபநேரம் : 08.59 10.29
ராகுகாலம் :04.29- 05.59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிளிநொச்சி சித்த மருந்தகம் புதிய கட்டடத்தில் திறப்பு

கிளிநொச்சி, ஜூலை 12

கிளிநொச்சி மத்திய பேருந்துநிலையத்துக்கு அருகாமையில் 55.52 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மத்திய சித்த மருந்தகத்தின் புதிய கட்டடம் மக்கள் சேவைக்காக நேற்று வெள்ளிக்கிழமை காலை திறந்துவைக்கப்பட்டது. குறித்த நிகழ்வு வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் வைத்தியர் தி.சர்வானந்தன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு குறித்த மத்திய சித்த மருந்தகத்தின் புதிய கட்டடத்தை மக்கள் சேவைக்காக உத்தியோகபூர்வமாகத் திறந்துவைத்தார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன் அவர்களும், கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார, சுதேச வைத்திய, சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு, சேவைகள் அமைச்சின் செயலாளர் ப.ஜெயராணி, கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ச-113)

# பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு இந்தியா கைகொடுக்கவேண்டும்!

*இந்தியத் துணைத்தூதுவரிடம்*
*யாழ். கால்நடை வளர்ப்பு சமாசம் கோரிக்கை*


யாழ்ப்பாணம், ஜூலை 12

**யாழ்.மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் பால் உற்பத்தியில் பெறுமதிசேர் பொருள்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றுக்கும் இந்தியா ஆதரவு வழங்கவேண்டும் என்றும் யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கோரிக்கை விடுத்துள்ளது.**

யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பிரதிநிதிகள், யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளியை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது அலுவலகத்தில் அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர். அத்துடன் யாழ்.மாவட்டத்தில் பண்ணையாளர்களின் பால் உற்பத்தி மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் குறித்தும் எடுத்துக்கூறப்பட்டது.




இந்தியாவின் பால் நிறுவனங்களால் ஆவின் மற்றும் அமுல் நிறுவனங்களிடம் ஆலோசனை மற்றும் உதவிகளைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பேன் என்று இதன்போது இந்தியத் துணைத்தூதுவர், உறுதியளித்தார். (ச-17)






## கண்பார்வையிழந்த வாழ்வக மாணவி

### சா/த பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தி

யாழ்ப்பாணம், ஜூலை 12

விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லமான சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தைச் சேர்ந்த பார்வையிழந்த மாணவி வரப்பிரகாசம் டனுஸ்கா நேற்றுமுன்தினம் வெளியான 2024ஆம் ஆண்டுக்கான சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளில் அனைத்துப் பாடங்களிலும் சித்திபெற்றுச் சாதனைபடைத்துள்ளார்.

திருகோணமலையைச் சேர்ந்த வரப்பிரகாசம் டனுஸ்கா தரம் 10 இல் கல்விகற்கும்போது தனது கண் பார்வையை முற்றாக இழந்தார். அடுத்து என்ன செய்வதென்று தெரியாது மூன்று ஆண்டுகள் வீட்டில் முடங்கியிருந்த இவர் 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தில் இணைந்துகொண்டார். வாழ்வகத்தில் இவருக்கு உடனடியாகவே பிறேயில் எழுத்துக் கற்பிக்கப்பட்டதுடன் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் வகையில் விசேட வகுப்புகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

இந்த நிலையிலேயே குறித்த மாணவி தனது விடாமுயற்சியால் 3 பி, 5சி, எஸ் என அனைத்துப் பாடங்களிலும் சித்திபெற்றுச் சாதித்துள்ளார்.

அதேவேளை சுன்னாகம் வாழ்வகத்திலிருந்து இம்முறை சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய ஜெயந்தன் அபிசாலினி எனும் மாணவியும் பரீட்சையில் சித்தி பெற்று உயர்தரம் பயிலத் தகுதி பெற்றுள்ளார். (ச-66)

## யாழ்.நகரின் பிரச்சினைகள் மாநகரமுதல்வர் களவிஜயம்

யாழ்ப்பாணம்,ஜூலை 12

யாழ்ப்பாணம் மாநகரத்தின் மத்தியில் பொதுமக்கள் அதிகம் வந்து செல்லும் பகுதிகளில் நிலவும் பிரச்சினைகள் குறித்து யாழ்.மாநகர முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா திடீர்க் களவிஜயம் மேற்கொண்டு அவதானித்தார். பொதுமக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாது சிரமங்களை எதிர்கொள்ளும் வகையில் நடைபாதையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விற்பனைப் பொருள்களை அப்புறப் படுத்துமாறு கடை நடத்துநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் நகர்ப்புற உணவகங்களின் சுகாதார நிலைமைகள், கழிவுநீர் வெளியேற்றப்படும் முறைகள் தொடர்பில் ஆராய்ந்ததுடன், கடைகளின் சுகாதார நடைமுறைகளை ஆவண ரீதியாக உறுதிப்படுத்துமாறு முதல்வர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். நகர்ப்புற வடிகால்கள் பல மிகவும் மோசமான நிலமையில் கிடப்பதை அவதானித்த முதல்வர், விசேட குழுவை நியமித்து நகர்ப்புற வாய்க்கால்களை சுத்தப்படுத்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறும் அறிவுறுத்தினார். (ச-20)

## பேசாலையின் அபிவிருத்தி மன்னாருக்கான ஒளிக்கீற்று

### பிரதேசசபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

மன்னார், ஜூலை 12

மன்னார் மாவட்டத்தில் சனத்தொகை அதிகம்கொண்ட கிராமமான பேசாலையை அபிவிருத்தி செய்வதனூடாக மன்னாரை சுபீட்சமடையச்செய்யலாம் என்று மன்னார்ப் பிரதேசசபை உறுப்பினர் திருமதி லூட்ஸ் ஒல்வியா பீரீஸ் தெரிவித்துள்ளார்.


தவிசாளர் அப்துல் ஜபார் முகமட் ஜப்ரான் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மன்னார் பிரதேசசபையின் மூன்றாவது அமர்வில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பேசாலை நகரின் மத்தியில் மீன்பிடி திணைக்களத்துக்கும் ரயில்வே திணைக்களத்துக்கும் சொந்தமான வெற்றுக்காணிகள் காணப்படுகின்றன. இவற்றை 99 வருடக் குத்தகைகளுக்குப் பெற்று இந்தக் குறைகளை நிவர்த்தி செய்யமுடியும். இதன் மூலம் மன்னார்ப் பிரதேச சபை அதிக வருமானத்தை ஈட்டக்கூடிய வாய்ப்பும் உண்டு. ஆகவே இதற்கான நடவடிக்கையை இந்தச் சபை முன்னெடுக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25,60)



கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் சப்பறத் திருவிழா கடந்த புதன்கிழமை மிகவும் சிறப்புற இடம்பெற்றது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நயினை அம்மன் ஆலய தீர்த்தோற்சவம்

யாழ்ப்பாணம், ஜுலை 12

வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாவின் 15ஆம் நாள் திருவிழாவான தீர்த்தத்திருவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சிறப்பாகவும், மிகவும் பக்தி பூர்வமாகவும் இடம்பெற்றது. (ச-66)

# பலவருடங்கள் கடந்தும் ரயில் கடவை இல்லை!

## இந்திராபுரம் மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஜுலை 12

**பளை இந்திராபுரம் கிராமத்தில் மீளக்குடியமர்ந்து எட்டு வருடங்கள் கடந்தபோதிலும் வீதியை ஊடறுத்து கிராமத்துக்குச் செல்வதற்கு இன்னமும் தண்டவாளக் கடவை அமைக்கப்படவில்லை. இதனால் அச்சத்தின் மத்தியில் பயணிக்க நேரிடுகிறது என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

2016ஆம் ஆண்டின் பின் வெடி பொருள்கள் அகற்றப்பட்டு கட்டம் கட்டமாக இங்கு மக்கள் மீளக்குடிய மர்த்தப்பட்டனர். இதுவரை 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன. கிராமத்துக்குச் செல்வதற்கான ரயில் கடவையை அமைத்துத் தருமாறு பல ஆண்டுகளாக பல்வேறு அரசியற்தலைவர்கள் மற்றும் அதிகாரிகளிடம் முறையிட்டும் இன்றுவரை கடவை அமைக்கப்படவில்லை. இதனால் வாகனங்களில் பயணிப்போர் முகமாலை மற்றும் இத்தாவில் பகுதிகளிலுள்ள வீதிகளையே பல்வேறு சிரமத்தின் மத்தியில் பயன்படுத்துகின்றனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-9-25)

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

கோயிலாமனை – கொடிகாமம் அருள்மிகு கண்ணகை அம்பாள் வீரபத்திரர் ஆலய சித்திரத் தேர் வெள்ளோட்டம் இன்று மாலை இடம்பெறவுள்ளது. கோயிலாமனை கொடிகாமம் அருள்மிகு கண்ணகை அம்பாள் வீரபத்திரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 5ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது. பத்து தினங்கள் உற்சவம் இடம்பெற உள்ள நிலையில் இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர் உற்சவமும் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது. (ம-100)

# மனிதப் புதைகுழிகளுக்கு நீதியை நிலைநாட்டுங்கள்

## சாவகச்சேரிப் பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஜுலை 12

செம்மணி மனிதப் புதைகுழியில் உள்ள இருள் நீங்கவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கேட்டும் நடத்தப்பட்ட 'அணையாவிளக்கு' போராட்டத்தின் கோரிக்கைகள் சாவகச்சேரி பிரதேசசபையின் முதலாவது அமர்வில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தின் கீழ் இயங்கும் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்ட அதிகாரிகள் தொழில்நுட்ப ரீதியான உள்ளீட்டை வழங்கவும் கண்காணிப்பில் ஈடுபடவும் இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும். மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தமது சமூகத்தின் வளங்களைப் பெற்று அதன்மூலம் சுதந்திரமான தொழிநுட்ப உள்ளீட்டைப் பெற்றுக் கொள்ள இலங்கை அரசாங்கம் அனுமதிக்குமாறு அழுத்தம் வழங்கவேண்டும் உள்ளிட்ட ஆறு கோரிக்கைகள் சவாவகச்சேரிப் பிரதேசசபையின் முதலாவது அமர்வில் ஏகமனதான தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. (ச-159)

# சாவகச்சேரியின் அபிவிருத்தி முதல் அமர்வில் ஆராய்வு!

கொடிகாமம், ஜுலை 12

சாவகச்சேரிப் பிரதேசசபையின் முதலாவது சபை அமர்வு தவிசாளர் பொ.குகதாசன் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றபோது சபைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் ஆராயப்பட்டன..

அதன்படி கொடிகாமச்சந்தை புனரமைத்தல், கைதடியில் உப அலுவலகம் அமைத்தல், 37 மயானங்களையும் துப்பரவுசெய்து மயானசபை அமைத்துப் பராமரித்தல், முறையான திண்மக் கழிவு அகற்றல், விரைந்த கட்டட அனுமதி வழங்கல், மின் விளக்குகள் திருத்தம் செய்தல், பிரதேசசபையின் அனுமதி இன்றி மீண்டும் மறவன்புலவுப் பகுதியில் மேற்கொள்ளும் உப்பள உற்பத்தியை நிறுத்துதல், கொடிகாமம் சந்தைப் பகுதியில் உள்ள கட்டடங்களை இயங்கவைத்தல், பழுதடைந்த வீதிகளை புனரமைத்தல், கைதடிப் பகுதியில் இருந்து அதிகளவிலான நன்னீரை வெளியே கொண்டுசெல்வதை தடுத்தல் என்பவற்றை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராயப்பட்டது. (ச- 25,159)


## கேள்வி அறிவித்தல்
## சாவகச்சேரி பிரதேசசபை
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி (PSDG) வேலைத்திட்டம் கட்டம் III 2025

1. சாவகச்சேரி பிரதேசசபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளரிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் கேள்விகளை கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி / கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
விலைக்கேள்வியாளர்கள் பொது கொன்றாக் சட்டம் 1987 இல 03 ன் பிரகாரம் பதிவிகை மேற்கொண்டிருக்க வேண்டும்.
4. தகைமை பற்றிய தகவல்கள் பெறுகை ஆவணத்தின வகுதி 4 ல் குறிப்பிடப்பட்டுள்ளனதோடு. மேலதிக தகைமைத் தேவைகளிற்கான வேலைகளுக்கு SBD 3 ற்கமைவாக பெறுகை ஆவணத்தின் அட்டவணை (Schedule -5) வகுதி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.
5. கேள்விகள் சமர்ப்பிக்கும் போது பெறுமதிசேர் வரி (VAT) வலுவிலுள்ள சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் உள்ளடங்கிய கேள்விதாரருக்கு மாத்திரமே வரிக் கொடுப்பனவை கோர முடியும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியிலுள்ள சாவகச்சேரி பிரதேசசபையில் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348) மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2025.07.12 தொடக்கம் 2025.07.25 வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09:00 மணி முதல் 15:00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை உள்ளூராட்சி மன்ற பெறுகை குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியில் 2025.07.12 ஆம் திகதியிலிருந்து 2025.07.25 ஆம் திகதி வரை காலை 09:00 மணிக்கும் மாலை 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 3,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனியாக உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம் எனும் முகவரிக்கு 2025.07.28 ஆம் திகதி மாலை 02:30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகள் அனைத்தும் அன்றையதினமே (2025.07.28) மாலை 2.30 மணிக்கு திறக்கப்படும். இதன்போது கேள்விதாரம் அல்லது அவரின் பிரதிநிதி (ஒருவர் மாத்திரம்) கலந்துகொள்ளமுடியும்.
9. கீழ் காட்டப்படும் கேள்விகள், கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து NP/14/41(6)/2/PSDG/2025/03 இலக்க வேலைக்கு 77 நாட்கள் (2025.10.13) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். கேள்வி பிணையானது அங்கிகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வழங்கப்படும் பிணைமுறி அல்லது எமது அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு அல்லது நிர்மான உத்தரவாத நிதி (CGF) ஆகியன மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
11. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2025.07.18 திகதி மாலை 15:00 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

| தொடர் இல | கேள்வி இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) ரூ.மில்லியன் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | NP/14/41(6)/2/PSDG /2025/03 | அறுகுவெளி திண்மக்கழிவகற்றல் பகுதிக்கான சுற்று வேலி அமைத்தல் | 8.30 | 84 | C8 or above (கட்டடம்) | 83,500.00 | 2025.07.28 - 2025.11.10 வரை |

2025.07.12
தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
சாவகச்சேரி பிரதேசசபை.

(CR/45487) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 - 05 - 1927

மறைவு 06 - 07 - 2020



## அமரர் கிருஸ்ணர் இராஜரட்ணம்

(ஓய்வுபெற்ற பொறியியலாளர், பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்)

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி பரந்தன், யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த கிருஸ்ணர் இராஜரட்ணம் அவர்களின் 5ம் ஆண்டு நினைவஞ்சலி.

அன்புத் தந்தையே, தங்களுக்கு எமது ஐந்தாம்
ஆண்டு நினைவஞ்சலிகள்
இதயம் கனக்கும் நினைவுகள் ஏராளம் இன்னமும் எங்களோடு. தந்தையே...
ஒளி வீசும் வழிகாட்டி நீங்கள். நிழல் போல நேசித்தே நடந்தீர்கள் நீங்கள்
கடந்த ஐந்து ஆண்டுகள் கடந்தும் இன்று,
உம் நினைவுகள் மட்டும் தான் உறவாய் நிற்கின்றன.
உம் வார்த்தைகள் எம்மை தாங்கும் வானம்.
உம் சிரிப்பு எம் வாழ்வின் அழகான கணம்.
துன்பம் வந்த போதும் துணையாய் இருந்தீர்கள். தூங்கினீர்கள் அப்பா
ஆனாலும் எங்கள் இதயத்தில் நீங்கள் உயிராய்.
எந்நாளும் எங்களோடு வாழ்கிறீர்கள்.
என்றும் நிறைவாய் எம் இதயம் தனில் இருக்கிறீர்கள் அப்பா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்

தகவல்: குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

பிறப்பு 09 - 09 - 1982

இறப்பு 11 - 07 - 2025



## பிரதீப் அருட்செல்வி (அருள்)

மாதகலைப் பிறப்பிடமாகவும், 10ம் வட்டாரம் புதுக்குடியிருப்பினை வசிப்பிடமாகவும், புங்குடுதீவு 4ம் வட்டாரத்தை பூர்வீகமாகவும் கொண்ட பிரதீப் (சதீஸ்) அருட்செல்வி அவர்கள் நேற்று (11.07.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம்-கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நவரத்தினசிங்கம் மற்றும் கமலராணி தம்பதியரின் அன்பு மருமகளும், பிரதீப் (சதீஸ்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற யோகதாஸன் மற்றும் தேவதாஸன்-சிவராஜி (சிற்ப ஆசாரி) காலஞ்சென்றவர்களான நகுலாம்பிகை, கலாசோதி, குறிஞ்சிமலர் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற பிரதீஸ் (மதி) மற்றும் பிரசாத் (விகி)-ரனித்தா, பிரசாந் (லிசி), பிரியா (பௌசி)-தரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இரணைப்பாலை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 958 8463
077 989 3719

புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

# ‘மன்னெழில்’ – இதழுக்கு ஆக்கங்கள் கோரல்

மன்னார் மாவட்டச் செயலகமும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து வெளியிடும் ‘மன்னெழில்’ மலரின் மூன்றாவது இதழுக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன. மன்னார் மாவட்டத்தின் வரலாறு, கடல்வளம், இயற்கை அமைவு, இலக்கியச் செழுமை, கலை பண்பாட்டுத்துறை வளர்ச்சி, உல்லாசப்பயணம், தொழிற்றுறைச் சிறப்பு ஆகியனவற்றைத் தாங்கியதாக இம்முறை ‘மன்னெழில் வெளிவரவுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப்பேரவையின் தலைவருமான க. கனகேஸ்வரன் தெரிவித்தார். மலர் தொடர்பான மேலதிக விடயங்களை அறிந்துகொள்ள தேசியக்கலைஞர் எஸ்.ஏ. உதயன் 0778960351 (மலராசிரியர்) மற்றும் இ. நித்தியானந்தன் 0775342441 (சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர் மலர்க்குழு உறுப்பினர்) ஆகியோருடன் தொடர்புகொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-60)

சாவகச்சேரி

# மருத்துவமனை வளாகம் நகரசபையால் சிரமதானம்



யாழ்ப்பாணம், ஜுலை 12

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வளாகத்தில் பற்றைக்காடாகக் காணப்பட்ட இரண்டு பரப்புக்காணியை நகரசபையினர் கடந்த செவ்வாய்க்கிழமை இயந்திரம்மூலம் துப்புரவுசெய்தனர்.

சாவகச்சேரி தொகுதி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரர் வ. ந. நவரத்தினம் குடும்பத்தினர் குறித்த காணியை பத்து வருடங்களுக்கு முன்னர் வழங்கியிருந்தனர்.

இந்தநிலையில் பற்றைக்குள் விஷ ஜந்துக்கள் உருவாகி அயலில் உள்ள குடியிருப்புகளுக்குள் புகுவதாக மக்கள் தெரிவித்த முறைப்பாட்டினை யடுத்து நகரசபையினர் இயந்திரம்மூலம் குறித்தகாணியைத் துப்பரவு செய்தனர். (ச-25,9)

# கூட்டம்

யாழ்ப்பாணம், ஜுலை 12

கிளிநொச்சி, ஜயந்திநகர், மகாதேவ ஆச்சிரமத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை, மாலை 3 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. சகல அங்கத்தவர்களும், மெய்யன்பர்களும் கூட்டத்தில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அறங்காவலர், நிர்வாக உறுப்பினர்கள் கேட் டுக் கொண்டுள்ளனர். (ச-25)


## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் ஆண்/ பெண் வேலையாள் தேவை. (சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 076 632 3554

## வேலையாட்கள் தேவை

| | |
|---|---|
| மேசன் | - Rs. 3000.00 - Rs 3500.00 |
| மேசன் உதவியாளர் | - Rs 2500.00 |
| வெல்டர் | - Rs 3000.00 - Rs 3500.00 |
| வயறிங், பிளமிங் | - Rs. 3000.00 |
| அலுமினியம் பிற்றிங் | - Rs. 3000.00 |
| தச்சு வேலை | - Rs 3000.00 - Rs 3500.00 |
| பெயின்ரர் | - Rs 3000.00 - Rs 3500.00 |

(தேவைப்படின் தினசரி சம்பளம் வழங்கப்படும்.)
(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)
தொடர்பு : 0777245399 (காலை 8.00 மாலை 5.30 வரை.)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(CS/58812) J-1

## வீடு/காணி விற்பனைக்கு

➤3.5 பரப்பு வீட்டுடன் கூடிய காணி பலாலி வீதிக்கு 500m தூரம் பரமேஸ்வரா சந்தி - (53 மில்லியன்)

➤1.5 பரப்பு வீட்டுடன் கூடிய காணி கண்டி வீதிக்கு அருகாமையில், கச்சேரி - (26 மில்லியன்)

தொடர்புகளுக்கு:
076 541 5030

## வேலையாட்கள் தேவை

1. தொழிநுட்ப உத்தியோகத்தர் (TO) HND or NCT - Civil
2. உதவி தொழிநுட்ப உத்தியோகத்தர் (TA)
3. கணிய அளவையாளர் (QS) HND or MCT QS
4. உதவி கணிய அளவையியலாளர் (AQS)
5. கணக்கு உதவியாளர் (Assistant Account)
6. அலுவலக உதவியாளர் (Office Assistant)

சுயவிபரக்கோவையை Whatsapp/Email மூலம் அனுப்பி வைக்கவும்
Email : starbuilder2025@gmail.com
TP : 074 112 9148
யாழ்ப்பாணம்

(CS 58815) E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 16 . 07 . 1948



மறைவு 14 . 06 . 2025

கடந்த 14.06.2025 சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### கயிலாயபிள்ளை நாகபூரணம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (14.07.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது குடும்பத்தலைவி உடல்நலக்குறைவு காரணமாக வீட்டில் இருந்தவேளை உதவிய அனைத்து உற்றார், உறவினர்கள், அயலவர்கள் மற்றும் நண்பர்களுக்கும், நோயுற்ற தருணங்களில் மருத்துவமனையிலும் வீட்டிலும் இருந்தவேளை சிகிச்சையளித்த வைத்தியர்கள் மற்றும் அனைவருக்கும், எமது அன்னையின் மரணச் செய்தி கேட்டு துயருற்ற வேளையில் நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும் மற்றும் சமூக வலைத்தளங்களூடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் வீதி
சாவகச்சேரி

குடும்பத்தினர்

(CS 3596) E

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 06 . 1955



மறைவு 11 . 07 . 2025

### திருமதி துரைசிங்கம் மகிழாம்பிகை

(ஓய்வு பெற்ற ஆசிரியர்-சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலை)

பறாளாய் வீதி, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைசிங்கம் மகிழாம்பிகை அவர்கள் நேற்று (11.07.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை (செட்டி வாத்தியார்)-இலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை-செல்லமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், துரைசிங்கம் (ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்-தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கம்-அச்சணை) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பறாளாய் வீதி,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்
க.துரைசிங்கம்
077 538 5603


## 'நிஜமும் நிழலும்' இதழ் வெளியீடு

யாழ்., ஜூலை 12

யாழ்.வட்டு இந்துக் கல்லூரியின் ஊடகக் கற்கைகள் கழக "நிஜமும் நிழலும்" இதழ் வெளியீடும், கண்காட்சியும் கல்லூரி மண்டபத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் திருமதி வதனி தில்லைச் செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி பிறேமலதா சுதேஸ்குமார், அரசியல் நிகழ்சித் தயாரிப்பாளர் பு.சுலக்சன், கௌரவ விருந்தினராக சிரேஸ்ட பத்திரிகையாளர் தர்மினி பத்மநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (25)

## மரண அறிவித்தல்

### திருமதி அட்சலிங்கம் ஜெயலட்சுமி



தோற்றம் 05.07.1935 மறைவு 10.07.2025

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அட்சலிங்கம் ஜெயலட்சுமி அவர்கள் கடந்த (10.07.2025) வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி-தில்லைவனம் தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அட்சலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, மங்களேஸ்வரி மற்றும் கோபாலகிருஷ்ணன் (J.P) பரிமளம் (ஓய்வு பெற்ற அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தேவராஜா (உப அதிபர்) மற்றும் தவராஜா (கனடா), சதாரூபி (ஓய்வு பெற்ற ஆசிரியை), சாந்தரூபி (ஓய்வு பெற்ற ஆசிரியை), கமலரூபி (ஆசிரியை), நகுலேஸ்வரி (ஆசிரியை), காலஞ்சென்ற கலாநிதி (லண்டன்), மற்றும் யசோதரராஜா (லண்டன்), பாரதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற யோகேஸ்வரி சுப்பிரமணியத்தின் சிறிய தாயாரும், காலஞ்சென்ற மாலினி (ஓய்வு பெற்ற ஆசிரியை) மற்றும் சிவகலா (கனடா), ஸ்ரீஸ்கந்தராஜா (உரிமையாளர் சுமங்கலி இன்-வெள்ளவத்தை), தர்மசீலன் (கனடா), காலஞ்சென்ற ஜெயரட்ணம் (ஆசிரியர்) மற்றும் சுகுமார் (ஆசிரியர்), காலஞ்சென்ற முருகசெஞ்சுடர் (லண்டன்) மற்றும் பிரசாந்தி (லண்டன்), சோதீஸ்வரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ருசிராங்கதன்-தேவநாராயணி (டுபாய்), பூர்ணா (ஆசிரியை), திலகதாசன் (ஆசிரியர்), தர்சிகா-தர்மிலன் (கனடா), கிருஷ்னி-பிரணவன் (கனடா), Dr.சுனந்தா-Dr.நிருபன் (லண்டன்), Dr.ஸ்ரீதுசாரா-Dr.ராகுலன் (லண்டன்), ஜனனி (கனடா), நயனி-தர்மேஷ் (கனடா), காலஞ்சென்ற கௌசிகா (B.O.C) மற்றும் சிந்துஜா (கனடா), அக்ஷயன் (மாணவன் பேராதனைப் பல்கலைக்கழகம்), கஜனி (லண்டன்), அஜனி (லண்டன்), யனுஷன் (லண்டன்), யஸ்மிதா (லண்டன்), சாயகி (லண்டன்), சானுஜா (லண்டன்), சிவகுமார் (பிரான்ஸ்), உஷாந்தி (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சின்மயன், ஆருத்ரா, லிசானி, ரிஷிகேசன், ஜேடன், கியாரா, ஆதர்ஷ், அக்ஷித் ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, இராமச்சந்திரன், திகம்பரேஸ்வரி மற்றும் பத்மநாதன் (ஓய்வு பெற்ற நிதி உதவியாளர்), காலஞ்சென்றவர்களான பழனிவேல்-சரஸ்வதி, கனகசபை-அன்னபூரணி, சேனாதிராசா-கமலாம்பிகை (ஓய்வு பெற்ற ஆசிரியை) மற்றும் நாகரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் நயினாதீவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் விபத்து நபரொருவர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஜூலை 12

காங்கேசன் துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இரவு தபால் ரயிலில் மோதுண்டு நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி தொண்டமாநகர் நகர் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கறுப்பையா ஐங்கரன் (வயது-40) என்ற நபரே உயிரிழந்தவராவார். இறப்பு விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-113)

# ஓட்டிசம் குழந்தைகளை பராமரிக்க நிலையங்கள்

கொழும்பு, ஜூலை 12

ஓட்டிசம் மற்றும் நரம்பியல் வளர்ச்சிப் பிரச்சினைகள் உள்ள குழந்தைகளுக்காக பராமரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கு தேசிய அளவிலான பொறிமுறையொன்று தயாரிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் எண்ணக்கருவின் அடிப்படையில் செயற்படுத்தப்படும் இந்தக் கூட்டுத் திட்டத்துக்கான எண்ணக்கரு ரீதியான முன்மொழிவை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட துறைசார் அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களால் செயற்படுத்தப்படுவதோடு ஒருங்கிணைப்பு பணிகளை ஜனாதிபதி அலுவலகம் மேற்கொள்ளவுள்ளது. (ச-இ)

## பொலிஸார்...

யாக ஏற்படுத்திய விபத்தில் அந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இராமசாமி அந்தோனிப்பிள்ளை (வயது - 59) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வவுனியா - கூமாங்குளம் பகுதியில் நேற்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. பொலிஸாரின் இந்தச் செயலைக் கண்டித்தும், உயிரிழந்த அப்பாவிப் பொதுமகனுக்கு நீதிகோரியும் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் இரவிரவாகப் பதற்றம் ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வவுனியா - கூமாங்குளம் பகுதியில் உள்ள மதுபானசாலைக்கு அருகில் பொலிஸார் ஒளிந்திருந்துள்ளனர். இதன்போது இரவு 9.45 மணியளவில் அந்தப் பொதுமகன் மோட்டார்சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது அவரைப் பின்தொடர்ந்து சென்ற பொலிஸார், மோட்டார்சைக்கிளின் சக்கரத்துக்குள் தடியைச் செலுத்தி செயற்கையான விபத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

இதையடுத்து, நிலத்தில் வீழ்ந்த பொதுமகன், சம்பவ இடத்திலேயே மயங்கிச் சரிந்து உயிரிழந்துள்ளார். இதை நேரடியாகப் பார்த்த பொதுமக்கள் ஆவேசமடைந்து பொலிஸாரைச் சுற்றிவளைத்துள்ளனர். வாக்குவாதத்தைத் தொடர்ந்து, பொலிஸாரை பொதுமக்கள் முறையாகக் கவனித்துள்ளனர். பொதுமக்களின் கவனிப்பிலிருந்து தப்பித்த பொலிஸார், மோட்டார்சைக்கிளைக் கைவிட்டு, மருத்துவமனையில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து மூன்றாவதாக மற்றொரு பொலிஸ் அதிகாரி சம்பவ இடத்துக்குச் சென்றபோது, அவரை பொதுமக்கள் சிறைப்பிடித்து கடையொன்றுக்குள் வைத்துப் பூட்டியுள்ளனர். அந்த மூன்றாவது பொலிஸ் அதிகாரி, விபத்தை ஏற்படுத்திய இருவரையும் காப்பாற்றும் நோக்கிலேயே சம்பவ இடத்துக்கு வந்தார் என்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நேரம் செல்லச்செல்ல பொதுமக்களின் கூட்டம் அதிகரித்தது. கூடவே பதற்றமும் பரபரபரப்பும் அதிகரித்தது. இரவு 11 மணியளவில், வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சம்பவ இடத்துக்குச் சென்றார். 'இந்த விபத்து கொலை வழக்காக விசாரிக்கப்படும். பொலிஸ் அதிகாரிகள் சம்மந்தப்பட்டிருந்தால் அவர்களுக்குத் தக்க தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும்' என்று வாக்குறுதி அவரால் வழங்கப்பட்டது. எனினும், பொதுமக்கள் அவரின் கருத்துக்கு செவிசாய்க்க மறுத்தனர். நீதிபதி வந்தால் மட்டுமே சடலத்தை மீட்க அனுமதிப்போம் என்று பொதுமக்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தனர். இதன்பின்னர் விசேட அதிரடிப் படையினர், கலகமடக்கும் பொலிஸார்,மேலதிக பொலிஸார் குவிக்கப்பட்டு சடலம் மீட்கப்பட்டது.


எனினும் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவும், விபத்து இடம்பெற்ற பகுதியிலும் இரவு 12 மணி தாண்டியும் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உயிரிழந்த நபர், எந்தக் குற்றப் பின்னணியும் அற்றவர் என்பதுடன் தோட்டம் செய்து வாழ்பவர் என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் அவர், மதுபானங்களை அருந்துவதில்லை என்றும் பொதுமக்கள் ஊடகங்களிடம் மேலும் கூறியுள்ளனர். (அ-ம-110)

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 08 . 1935

இறப்பு 11 . 07 . 2025



### திருமதி நடராஜா அன்னபூரணம்

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா அன்னபூரணம் அவர்கள் நேற்று (11.07.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரட்ணசிங்கம்-மீனாட்சி தம்பதியின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற நடராஜா அவர்களின் அன்புமனைவியும், குகநேசன் (ஓய்வு இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம்), சிவநேசன் (உஷா ஏஜென்சி), Dr.அருள்நேசன் (கனடா), கலைவாணி (அஞ்சல் திணைக்களம்-யாழ்ப்பாணம்), உஷாவாணி (ஆசிரியர், சென் சாள்ஸ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கு.சுகந்தி, சி.சுகந்தி, அரியாசினி (கனடா), பரமேஸ்வரன், காலஞ்சென்ற சுரேந்திரன் ஆகியோரின் மாமியாரும், நிதர்சன், விதூஷன், செந்தூரன், ஏரோன், சரோன், ஹரிசனன், நி.றேணுகா, வி.சிவமனோகரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அகர்சன், சுவஸ்திகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 09.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 967 1932
077 717 6702

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 10 . 1941

மறைவு 09 . 07 . 2025



### சிவஞானம் சபாரட்ணம்

இலந்தகட்டி வைரவர் கோவிலடி, ஏழாலை கிழக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் சிவஞானம் அவர்கள் கடந்த (09.07.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவனேசம் அவர்களின் அன்புக் கணவரும், மோகனதாஸ் (கனடா), லோகிதா (லண்டன்), சிவறாஜினி (பிரான்ஸ்), சிந்துஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான யோகநாதன், பாலசுப்பிரமணியம், சிவகொங்கை, ஞானச்சந்திரன் மற்றும் சிவபாக்கியம், இராசரத்தினம், சிவரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மருமக்களாகிய சிவகங்கா, குனாளன், பரணிதரன், தினேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், சப்றீனா, கிருத்திகா, சஞ்சய், துளசி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 02.00 மணி அளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கடாகடம்பை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : மோகனதாஸ் (மகன்)
077 316 1840
சிவனேசம் (மனைவி)
021 221 3825

இலந்தகட்டி வைரவர் கோவிலடி,
ஏழாலை கிழக்கு, ஏழாலை

(CS/3599) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவு...

சர் நளிந்த ஜெயதிஸ்ஸவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.சிறிபவானந்தராஜா, வடமாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜெயராணி பரமோதயன், இலங்கைக் கடற்படையின் வைஸ் அட்மிரல் பானகொட, வடமாகாண கடற்படையின் கட்டளைத் தளபதியான ரியர் அட்மிரல் எஸ்.ஜே. குமார ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-ச-26-41)

## ஆணொருவரின்...

மீட்கப்பட்டுள்ளார். இராமச்சந்திரன் ஜெயகாந்தன் (வயது-40) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இறப்புக்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

## பாலியாற்றுத்...

வடக்கு மாகாணத்தில் உள்ள மிகவும் முக்கியமான ஆறாக பாலியாறு காணப்படுகின்றது. 68.4 கிலோமீற்றர் நீளமுள்ள இந்த ஆறு வவுனியா மாவட்டத்தின் புளியங்குளத்தில் ஆரம்பித்து, வடக்கு மற்றும் வடமேற்குத் திசைநோக்கி நகர்ந்து முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைக் கடந்து கடலுக்குள் கலக்கின்றது.

இவ்வாறிருக்கையில், மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் பாலியாற்றை இடைமறித்து 4.6 கிலோமீற்றர் நீளமும், 41 அடி உயரமும் கொண்ட மண் அணைக்கட்டு அமைக்கப்பட்டு உருவாக்கப்படவுள்ள நீர்த்தேக்கமே பாலியாறு குடிதண்ணீர்த் திட்டமாகும்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டமும், கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவும், மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு மற்றும் மடு பிரதேச செயலாளர் பிரிவுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுகளும் குடிதண்ணீரைப் பெறக்கூடியதாக இருக்கும்.

இந்தத் திட்டத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்வாங்க அடிப்படையில் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில், பாலியாற்றுத் திட்டத்துக்குத் தேவையான வனப்பகுதியை வழங்க முடியாது என்று வனவளத் திணைக்களம் அண்மையில் அறிவித்திருந்தது. இதனால், இந்தத் திட்டம் முற்றாக முடங்கும் ஆபத்து ஏற்பட்டிருந்த நிலையில், துறைசார் அமைச்சர்கள் குழு நாளை வடக்குக்கு வருகை தந்து கள ஆய்வில் ஈடுபடவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, மன்னார் மாவட்டச் செயலகத்தில், பாலியாற்றுத் திட்டம் தொடர்பில் தீர்க்கமான கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கும் அவர்கள் தீர்மானித்துள்ளனர். (அ-ம-26)

## பிரிக்ஸில்...

நம்பிக்கையான பங்காளியாக இலங்கை உள்ளது - என்று ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சர் லாரவ் அறிவித்துள்ளார்.

மலேசியாவின் கோலாலம்பூர் நகரில், ஆசியான் உச்சிமாநாடு நடைபெற்று வருகின்றது. இந்த மாநாட்டின் துணை அம்சமாக, ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் லாரவ், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இருவரும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இதன்போதே, பிரிக்ஸ் கூட்டணியில் இலங்கை இணைவதற்கு லாரவ் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவில் ரஷ்யாவின் நம்பிக்கையான நாடாக இலங்கை உள்ளது. இலங்கையுடனான இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு ரஷ்யா விருப்பம் கொண்டுள்ளது. சர்வதேச ரீதியில் தற்போது ஏற்பட்டுள்ள அதீதமான பொருளாதார அழுத்தத்தை இலங்கையுடன் இணைந்து ரஷ்யா வெற்றிகரமாக எதிர்கொள்ளும் என்று இந்தச் சந்திப்பின் போது அமைச்சர் லாரவ் கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், பொருளாதார நெருக்கடியின்போது ரஷ்யாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவிகளுக்காக தனது நன்றியைத் தெரிவித்தார். (அ-ம)

## வீதியில்...

நுணாவிலைச் சேர்ந்த ராகுலன் ஜோன் டினோசன் (வயது-22) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

தூள் திரிப்பதற்காகச் சென்றவர், வீதியின் ஓரமாக நின்றபோதே நேற்றுமுன்தினம் மாலை இந்த விபத்து சம்பவித்துள்ளது.

படுகாயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வின்சன்ட் தயான் அன்ரலா மேற்கொண்டார். (அ-ம-26)

## 13,392...

ஏ.கே.எஸ்.இந்திகா குமாரி லியனகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இதற்கு, பாடசாலைகளில் இருந்து 3 இலட்சத்து 98 ஆயிரத்து 182 விண்ணப்பதாரிகளும், 75 ஆயிரத்து 965 தனியார் விண்ணப்பதாரிகளும் விண்ணப்பித்திருந்தனர். மொத்தமாக 4 இலட்சத்து 74 ஆயிரத்து 147 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களுள் மொத்தமாக 4 இலட்சத்து 25 ஆயிரத்து 152 பேர் பரீட்சைக்கு தோற்றினர். சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 13 ஆயிரத்து 392 பேர் அனைத்து பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர். இது 4.15 சதவீதமாகும். 2.34 சதவீத மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்' - என்றார். (அ-ம-44)

## கடைசி...

கப்பட்டுள்ளது. மாகாண ரீதியாக மாணவர்கள் தேர்ச்சிபெற்ற வீதத்தின் அடிப்படையில், தென்மாகாணம் முதலிடத்தில் உள்ளது. அங்கு 73.64 வீதமான மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர். வட மாகாணத்தில் 69.86 வீதமான மாணவர்களே சித்திபெற்றுள்ளனர்.

மாகாண ரீதியான தரநிலைகளின்படி தென் மாகாணம் முதலிடத்திலும், மேல் மாகாணம் இரண்டாவது இடத்திலும், கிழக்கு மாகாணம் மூன்றாவது இடத்திலும், மத்திய மாகாணம் நான்காவது இடத்திலும், சப்ரகமுவ மாகாணம் ஐந்தாவது இடத்திலும், ஊவா மாகாணம் ஆறாவது இடத்திலும், வடமேற்கு மாகாணம் ஏழாவது இடத்திலும், வடமத்திய மாகாணம் எட்டாவது இடத்திலும், வடக்கு மாகாணம் ஒன்பதாவது இடத்திலும் உள்ளன. (அ-ம)

## நவம்பர்...

பர் மாதம் 5ஆம் திகதிவரை நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ்.இந்திகா குமாரி லியனகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குரிய விண்ணப்பம்கோரல் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. இம்மாதம் 21ஆம் திகதியுடன் அதற்குரிய நடவடிக்கை நிறைவுபெறும். 2025 நவம்பர் 10ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 5ஆம் திகதிவரை உயர்தரப்பரீட்சையை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

அடுத்த க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் நடத்துவதற்கு உத்தேசித்துள்ளோம்' - என்றார். (அ-ம-44)

## செம்மணிப்...

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுகளும், வடக்கு, கிழக்கில் கண்டுபிடிக்கப்பட்ட வேறுபல புதைகுழிகளும் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற இனவழிப்பையும், போர்க்குற்றங்களையும் பறைசாற்றுகின்றன என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானமும், பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும் ஜனாதிபதி அநுரவுக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

'செம்மணி மனிதப் புதைகுழி விசாரணையில் உண்மையைக் கண்டறிதல், சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் நீதியின் அவசியம்' என்ற தலைப்பில் அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தின் சாராம்சமாவது:-

இலங்கையில் 1990களின் நடுப்பகுதி வரை தொடர்ந்த காணாமலாக்கப்படுதல் மற்றும் நீதிக்குப் புறம்பான கொலைகளின் நீண்ட, தீர்க்கப்படாத வரலாற்றையே செம்மணி பிரதிபலிக்கின்றது.

2025 ஆரம்பத்தில், செம்மணி அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தை மறுசீரமைக்கும் பணிகளின்போது மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதையடுத்து யாழ். நீதவான் நீதிமன்றம் அந்த இடத்தை அதிகாரபூர்வமாக ஒரு மனிதப் புதைகுழியாக அறிவித்து, நீதித்துறையின் மேற்பார்வையில் அகழ்வுகளை மேற்கொள்ள உத்தரவிட்டது. இன்றுவரை, இரண்டு கட்டங்களாக நடந்து வரும் அகழ்வுப் பணிகளில் குழந்தைகளுடையவை உட்பட சுமார் 65 எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த மனித எச்சங்களோடு புத்தகப்பை, பொம்மை, வளையல்கள், காலணிகள் மற்றும் உடைத் துணுக்குகள் போன்ற தனி உடைமைகளும் சேர்த்தே மீட்கப்பட்டிருக்கின்றன.

அனைத்து எலும்புக்கூடுகளும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தடய ஆய்வுகளுக்காக பேணப்பட்டு வருகின்றன.

இந்த அகழ்வுகளோடு, வடக்கு, கிழக்கு தமிழர் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட வேறும் பல புதைகுழிகளையும் சேர்த்துக் கருத்தில் எடுக்கும்போது, இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களையும், இனவழிப்பு முயற்சிகளையும் வெளிப்படுத்தும் தெளிவான ஆதாரங்களாக அவை அமைகின்றன. இலங்கை அரசானது தனது இந்தத் தமிழர் விரோத கொடும் வரலாற்றை முழுமையாக ஏற்றுக்கொள்வது அவசியம்.

மாறும் நீதி செயல்முறையின் அடிப்படையாக உண்மைக்கான தேடல் அமைய வேண்டும். 2009இல் போர் முடிவடைந்த பிறகு பதினாறாண்டுகளுக்கு மேல் கடந்தும் நூற்றுக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் இன்னும் பதில்களைத் தேடியலைகின்றனர். இந்த குடும்பங்கள் தங்கள் காணாமல்போன உறவுகளின் நிலை குறித்து பதில்மறுக்க முடியாத கேள்விகளை எழுப்புகின்றனர். அடுத்தடுத்த அரசாங்கங்களின் தொடர் மௌனம் வெறும் அரசியல் தோல்வி மட்டுமல்ல, தீவிரமான தார்மீகத் தவறும் கூட. உண்மையை அறியாது கடக்கும் ஒவ்வொரு ஆண்டும் போரின் வடுக்களில் இருந்து நாடு குணமடைவதையும், தொக்குநிற்கும் கேள்விகளின் முடிவையும் தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கின்றது.

1999இல் அகழப்பட்ட பதினைந்து உடல் எச்சங்களும், இன்று அகழப்பட்டுக் கொண்டிருக்கும் எலும்புக்கூடுகளும் ஒரே குற்றவியல் சூழலுடன் தொடர்புபட்டவை. இருப்பினும், அன்றைய அகழ்வைக் குறித்த கொழும்பு நீதிவான் நீதிமன்றில் இருக்கும் முடிவுறா வழக்கானது இன்றைய விசாரணைகளுடன் முறையாக இணைக்கப்படவில்லை. இவை இப்போது ஒரே குற்றவியல் நடவடிக்கையின் பகுதிகளாகக் கருதப்பட வேண்டும். இரு விசாரணைகளையும் ஒருங்கிணைத்தால்தான் பொறுப்புக்கூறல் ஏற்பட முடியும். அத்துடன், அகழ்வுப் பணிகளின் போது சர்வதேச கண்காணிப்பு மிக அவசியம் - என்றுள்ளது. (அ-ம-26)

## ஆணிப்பலகை...

வல்லிபுரம் பகுதியிலிருந்து சட்டவிரோத மணல் கடத்தல் இடம்பெறுவதாகக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து பருத்தித்துறை பொலிஸார் டிப்பரை சுற்றிவளைத்துள்ளனர்.

மந்திகை சந்தியில் டிப்பரை மறித்தபோதிலும், அது நிற்காமல் பயணித்துள்ளது. இதைத் தொடர்ந்தே, தம்பசிட்டி வீதியில் டிப்பர் சென்று கொண்டிருந்த போது ஆணிகள் அடிக்கப்பட்ட பலகை வீசி மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது. டிப்பர் தற்போது பருத்தித்துறைப் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. மேலதிக சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-100)


## வெள்ள...

பில் ஆராய்வதற்காக வருகைதரவுள்ள அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, தம்மிக்க பட்டபெண்டி, அநுர கருணாதிலக ஆகியோர் மன்னாரில் நீண்டகாலமாக நிலவும் வெள்ளப் பேரிடர் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்தாலோசனையில் ஈடுபடவுள்ளனர். இதன்போது பல முக்கியமான முடிவுகள் எட்டப்படலாம் என்று கருதப்படுகின்றது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 11 . 1940



மறைவு 08 . 07 . 2025

## சின்னையா அப்புத்துரை

**(முன்னாள் உத்தியோகத்தர் - இலங்கை போக்குவரத்து சபை)**

யாழ் சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு சின்னையா அப்புத்துரை (CTB) அவர்கள் கடந்த (08.07.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவஞானம் - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சிவரஞ்சன், ஞானரஞ்சன் (பரமேஸ்வரன்), ஜெயரஞ்சன், சிறீரஞ்சனி, ஜனாரஞ்சனி ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகாம்பிகை, ஞானாம்பிகை, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்மலிங்கம், மகேஸ்வரன், காலஞ்சென்ற பாலசுப்ரமணியம் மற்றும் பாலசுந்தரம், பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவகுமார், மோகனராஜன், இராஜேஸ்வரி, கிரிதாரணி, ஆரணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரபாகரன், கார்த்திகா, நிருத்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும் சாமுவேல், ஸ்ரெலா, அனுக்ஷி, சுவர்ணன், மிதுன், யாத்விகா, கவினாஷ் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், கஜன், கரிஷ், ஆர்த்தினி ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் நாளை (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆரம்பமாகி வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இமையாணன் மேற்கு,**
**உடுப்பிட்டி**

(CS 58827) E

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**0094778497967**

## சாதாரணதரப்...

தோற்றிய மாணவிகளில் 120 மாணவிகள் 9ஏ சித்திகளையும், 36 மாணவிகள் 8ஏ சித்திகளையும், 25 மாணவிகள் 7ஏ சித்திகளையும் பெற்றுள்ளனர். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவிகளும் சித்தியடைந்துள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்து இம்முறை சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 82 மாணவர்கள் 9ஏ சித்திகளையும், 73 மாணவர்கள் 8ஏ சித்திகளையும், 33 மாணவர்கள் 7ஏ சித்திகளையும் பெற்றுள்ளனர்.

(அ-ம-66)

**பணிப்பெண் தேவை**


யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றில் தங்கி நின்று பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை. 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
**077 428 6976**

(CS 58824) E

**கோழி வளர்ப்போருக்கு**

இத்தாலியில் (Italy) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கோழி குஞ்சு பொரிக்கும் இயந்திரம் (Egg Incubator)
ஒரே நேரத்தில் 49 கோழி முட்டைகளை அடைகாக்கும் அரை தானியங்கி இயந்திரம் இப்பொழுது எம்மிடம். அத்துடன் விரும்பிய பறவைகளின் முட்டைகளையும் பயன்படுத்தலாம். இது ஒரு இத்தாலி (Italy) நாட்டின் தயாரிப்பு
"நாங்கள் உங்களோடு"



**ஆர்க் .என். கம்பனி**
- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803

**Techna**
Technical Institute
THE BEST QUALITY EDUCATION FOR TECHNOLOGY STREAM
Technatechnicalinstitute

**A/L தொழினுட்பப்பிரிவு**
**புதிய கல்வியாண்டு**
**A/L 2027**
அனுமதி: 13.07.2025 ஞாயிறு, காலை 8.00 மணிக்கு.
077 170 3549 வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## பாலசுப்ரமணியம் நாகேஸ்வரி



சிங்கப்பூரை பிறப்பிடமாகவும் வளாகவீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்ரமணியம் நாகேஸ்வரி அவர்கள் நேற்று (11.07.2025) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - பொன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற பாலசுப்ரமணியம் அவர்களின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கனகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் செல்வமதி ஆகியோரின் சகோதரியும், செல்வராணி, சுகந்தி (Swiss), பாலகுமார் (சௌமியா களஞ்சிய உரிமையாளர்), ஷாமினி (London), காலஞ்சென்ற செல்வகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற உதயகுமார் (கலட்டிக்கண்ணன்) மற்றும் சுதாகரன் (Swiss), அழகேஸ்வரி (செல்வி), காலஞ்சென்ற தவசீலன் ஆகியோரின் அன்பு மாமியும், நிரேஷன் (கயன்) - துர்க்காலக்சுமி (Karudda (PVT) LTD), நிவேதிகா - சொபிசன் (Dr. Pet vet - Colombo), விதுஷன் - பிருந்திகா (Ondraga groups உரிமையாளர்), யதுஷன் (Doctor), உதயரோசன் (உமேஸ்) (The Chola Samraaj Restaurant - உரிமையாளர்), மாதுளன் (Swiss), சௌமியா (யாழ் மருத்துவ பீடம்), மதுஷனா (யா/இந்து மகளிர் கல்லூரி A/L (2024)), சர்மிதா (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவி), தாருஜன் (London), தாருக்ஷா (London) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆதிரன், அதிதி, ஆருஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தோற்றம்** **08.03.1946** **மறைவு** **11.07.2025**

**56/14 வளாகவீதி,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**077 642 3560**
**077 079 1606**
**077 938 2173**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.